பிரம்மைகளின் மாளிகை-- விகடன் தடம் இதழில் தொடராக வந்த சுயசரிதைக் கட்டுரைகள்

ஒரு கலை இலக்கிய வாக்குமூலம் - 1

சுவர்க் கடிகாரமாய் நிலவு. படுக்கை அறையில் அப்பாவுடன் நான். அப்பாவின் உடம்பு வாசனையின் அணைப்பில் தூக்கக் கலக்கத்தில் கிடக்கிறேன். ஐந்து வயதுச் சிறுவனாகிய நான் படுக்கை அறைச் சுவரில் அப்பா தீட்டிய ஓர் ஓவியத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

நீலமும் கருமையும் கலந்து புரளும் ஓவியத்தில் இருக்கும் அடர்ந்த இருட்டுக்குள்ளிருந்து தீர்க்கமான ஒரு முகம் தெரிந்தும் தெரியாமலும் புலப்படுகிறது. கருணை பொழியும் இரு கண்கள். நீண்ட எடுப்பான நாசி. இருட்டில் மறைந்தும் மறையாமலும் மெலிதான உதடுகளும், நீண்ட காதுகளும். புருவ மத்தியிலிருந்து மெலிதான மஞ்சள் நிற ஒளி தோன்றி மெல்லப் பரவுவதாய்ச் சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. இருட்டில் தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் ஓவியம் ஏனோ எனக்கு தினந்தோறும் இனம் புரியாத பயத்தை உருவாக்கும். அப்பாவிடம் கேட்பேன்:

" என்னதுப்பா இது?".

"புத்தர் ஞானோதயம்டா" ..

அவர் சொல்வது புரிந்ததே இல்லை எனக்கு. கேட்ட கேள்விக்கு ஏதோ ஒரு பதில் கிடைக்கும் நிம்மதியில் தூங்கிப் போவேன் நான். சென்னை ஓவியக் கல்லூரியில் ராய் சௌத்துரி காலத்தில் நீர்வண்ண ஓவியத்தில் மதராஸ் ராஜதானியிலேயே முதல் பரிசு பெற்றவர்தான் எனது அப்பா ஏ.பி. கஜேந்திரன். இவர் தீட்டிய "புத்தர் ஓவியம்" எனது ஆழ் மனதில் புதைந்து போனது எப்படி என்ற கேள்விக்கு இன்று வரையிலும் பதில் கிடைக்கவில்லை. அப்பா தத்ரூபமாக வரைந்த பிரமானந்தம் தாத்தா, கோகிலா அத்தை ஆகியோரின் உருவப் படங்கள் பூசை மாடத்தில் இன்றைக்கும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. உள்ளங்கைக் குவித்து ஏந்திய நீர் , விரல்களின் சந்துகளில் மெல்ல வடிந்து போவதுபோல என் பால்யகால நினைவுகளில் பெரும்பாலானவை வடிந்து போய் விட்டன..

ஆனால் " புத்தரின் ஞானோதயம் " ஓவியம் மட்டும் என் நினைவுப் பாதையில் இன்றைக்கும் வழி மறிக்கிறது.

ஐந்து வயதில் எனக்கு என் அப்பாவின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட "ஞானோதயம்" என்ற வார்த்தைக்கு எழுபது வயது ஆகிவிட்ட இன்று வரையிலும் அனுபவப் பூர்வமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. எஞ்சியிருப்பதெல்லாம் என்னிடம் ஞாபகங்கள் மட்டுமே. அவையும் ஒருநாள் கைநழுவிப் போய்விடலாம். நான் வெறும் நிழல்களை மட்டுமே கையில் பிடித்துக் கொண்டிருப்பேன்.

புதுமைப் பித்தன் தனது " கயிற்றரவு" கதையில் சொல்லுவார்: "இன்று- நேற்று- நாளை என்பது எல்லாம் நம்மை ஒரு ஆதார எண்ணாக வைத்துக் கொண்டு கட்டி வைத்துப் பேசிக் கொள்ளும் சவுகரியக் கற்பனைதானே " என்று.

ஆம்…புதுமைப் பித்தனோடு நான் உடன்படுகிறேன்.. நம் வாழ்க்கையே நம்மை ஒரு ஆதாரமாக வைத்துக் கொண்டு எழுப்பிக் கொள்ளும் சௌகரியமனான கற்பனைதானே தவிர வேறெதுவுமில்லை என்று எனக்கு நன்றாகப் புரிகிறது. ஆனாலும் "நான்" எனும் பிரம்மையில் வாழுமாறு சபிக்கப்பட்டிருக்கிற நான். என்னதான் செய்ய முடியும்?

- * * * * *

பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த பாண்டிச்சேரியில்தான் 1948இல் நான் பிறந்தேன். ஆனால் பிரிட்டீஷ் இந்தியா நான் பிறப்பதற்கு முன்னால் 1947இலேயே சுதந்திரம் பெற்று விட்டு இருந்தது. சுதந்திர பிரிட்டீஷ் இந்தியா பிறந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகுதான் (ஆகஸ்ட்டு 16 , 1962 இல்) பாண்டிச்சேரி , காரைக்கால், ஏனாம், சந்திரநாகூர் போன்ற பிரெஞ்சு காலனியாதிக்கத்தில் இருந்த பகுதிகள் பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றன.அதுவரை எனது தந்தை நகரமான சென்னையிலிருந்து தாயின் நகரமான பாண்டிச்சேரிக்குச் செல்ல "கஸ்டம்ஸ் கிளியரன்ஸ்" வாங்க வேண்டியிருந்தது என்பதைச் சொன்னால் நீங்கள் சிரிப்பீர்கள்.

பாண்டிச்சேரி விடுதலை பெறுவதற்கு முன்னரே நான் எழுதிய "கர்வம்" எனும் ஒரு உருவகக் கதை ஒன்று "அவ்வையார்"

எனும் இலக்கிய இதழில் முதன் முதலில் வெளிவந்து விட்டது. அப்போது எனக்கு 12 வயது. புதுவையில் வாழ்ந்த எனது சொந்தக்காரச் சிறுவர்கள் அனைவரும் பிரெஞ்சு படித்துக் கொண்டும் பிரெஞ்சில் பேசிக் கொண்டும் இருந்த கால கட்டம் அது. சிறுவர்கள் ஒருவரை ஒருவர் “கொஷோன்” (பிரெஞ்சில் பன்றி என்று அர்த்தம்) என்று வைது தங்களைப் பிரெஞ்சுக்கார்களாக பாவித்து சந்தோஷப்படுவது வழக்கமாயிருந்தது. அந்த காலகட்டத்து ஆண் பிள்ளைகள் எல்லோரின் இறுதி லட்சியமும் பிரெஞ்சு படையில் “சொல்தா”வாகச் (சிப்பாய் என்பதின் பிரெஞ்சுச் சொல்) சேர்வதாக இருந்தது. பெண்களின் இறுதி லட்சியம் ஏதெனும் ஒரு சொல்தாவைக் கல்யாணம் செய்து கொண்டு பிரான்சில் சென்று செட்டில் ஆகி “ஷொக்லா” (சாக்லேட்) சாப்பிட்டுக் கொண்டிருப்பதாக இருந்தது..

ஆனால் எனக்கு மட்டும் இவை கவர்ச்சியாகவே தெரியவில்லை. ஏனோ தமிழ்ப் புத்தகங்களைப் படிப்பதில் தணியாத ஆர்வம் கொண்டிருந்தேன். தனிநாயகம் அடிகள், ரா.பி.சேதுப்பிள்ளை, திரு.வி.க, கா. அப்பாதுரையாரின் உலக இலக்கிய மொழிபெயர்ப்புகள் , ம.பொ.சி என என் வீட்டில் இருந்த என்னை விட 10 வயது மூத்த அத்தை மகன் கவிஞர். ப.ராஜேஸ்வரன் வைத்திருந்த டிரங்கு பெட்டி நிறைய இருந்த தமிழ்ப் புத்தகங்களை எல்லாம் வெறியோடு படித்து முடித்தேன். பொது நூலகத்துக்கு தினம் தவறாமல் என் பள்ளி நண்பன் எஸ்.தியாகராஜனுடன் சென்று ஒவ்வொரு புத்தகமாய் வாங்கி வந்து மொத்த புத்தகத்தையும் மனப்பாடம் செய்து விட்டுத்தான் திருப்பிக் கொடுப்பேன்.

பாண்டிச்சேரியில் எனது ஆதிலட்சுமி பாட்டி வீட்டில் பாரதியாரால் பூணூல் போடப்பட்டு பிரம்மணராக்கப்பட்ட பெரியவர் ரா. கனகலிங்கம் மற்றும் அவரது மனைவி அரசாம்பாள் ஆகியோர் தங்கியிருந்தார்கள். ரா. கனகலிங்கம் அவர்கள் வெள்ளை வெளேர் கதர் சட்டை, கதர் வேட்டி கட்டி தனித்து இயங்கி வருவார். ஆனால் காலணா சம்பாதிக்க வகையற்றவர். என் பாட்டி வீட்டில் தங்கி இருந்தார். அவர் பாரதியின் சீடர்களில் ஒருவர் என்பதால் என் பாட்டி தன் வீட்டில் அவரையும் , அவரது மனைவியையும் வைத்து இலவசமாக உணவும் உறையுள்ளும் கொடுத்து விருந்தோம்பி வந்தார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வெறும் 10 ஆண்டுகள்தான் புதுவையில் வாழ்ந்து இருக்கிறார்.ஆனால் அவர் புதுவையில் ஏற்படுத்திய இலக்கிய எழுச்சி சொல்லி மாளாது. எனது அம்மா பிறந்த பெல்கோம் வீதியிலிருந்து இரண்டு தெரு தள்ளிதான் பாரதியாரின் வீடு இருந்தது. என்னைச் சுற்றி பாரதி, பாரதிதாசன் பற்றிய பேச்சு நிகழ்ந்து கொண்டே இருந்தது. எனது தாய்மாமன் துரைராஜ் ஜொபேன் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியபோது அவரது வகுப்பு மாணவராக இருந்த அனுபவங்களைச் சொல்வார். பாரதிதாசனாரின் சிலம்பப் பயிற்சி பற்றியும், படிக்காத மாணவர்களை பாரதிதாசன் எப்படி வெளுத்து வாங்குவார் என்பது பற்றியும் கதை கதையாகச் சொல்வார். கனக சுப்புரத்தின வாத்தியார் என்றாலே அவர் ஒரு கண்டிப்பான முரட்டு வாத்தியார் என்பதாகவே அவரது சித்தரிப்பு இருக்கும்.

சென்னையில் எங்களது தேனாம்பேட்டை வீட்டுக்கு ஓவியரான எனது தந்தையைத் தேடி கவிஞர் கம்பதாசன் அடிக்கடி வருவார். நான் பார்த்த கவிஞர்களிலேயே பேரழகன் கவிஞர் கம்பதாசன்தான் என்றுதான் நான் சொல்வேன். கூர்மையான நாசி, மாம்பழக் கன்னங்கள், பாகவதர் கிராப்பு , சந்தனக் கலர் ஜிப்பா என்று இன்னமும் என் கண் முன்னால் நிற்கிறார் அவர். நினைத்துப் பார்த்தால் நான் ஒரு எழுத்தாளனாக வரவேண்டும் எனும் எனது ஆசையே கவிஞர் கம்பதாசனைப் பார்த்துதான் எனக்குத் தோன்றியது எனலாம். பாரதி தேசியக் கவி, பாரதிதாசன் திராவிட கவி என்றால், கம்பதாசனை சோஷலிச கவி என்றுதான் சொல்ல வேண்டும். "மங்கையர்க்கரசி" (1949 எனும் திரைப்படத்தில் கவி வித்தியாபதி வேடமேற்று அவர் சினிமாவில் நடிக்கவும் செய்திருந்தார் . ரசிகமணி டி.கே.சி “இவர் கம்பதாசர் அல்லர், கம்பரே” என்று பாராட்டியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.ஆனால் மதுப் பழக்கம் மிகுந்த கம்பதாசனை என் அப்பா அடிக்கடி வீட்டுக்குக் கொண்டு வந்து மயக்கம் தெளிவித்து பக்கத்தில் இருந்த அவரது மாமியார் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வருவார் என்பது நினைவிலிருக்கிறது. எனது அப்பாவின் பிரதான வேலை எழுத்தாளர்களை, ஓவியர்களை, புறா வளர்ப்பவர்களை, வள்ளலார் சன்மார்க்க சங்கத்தைச்

சேர்ந்தவர்களை, இசைக் கலைஞர்களை எல்லாம் வீட்டில் உட்கார வைத்துக் கொண்டு நாளெல்லாம் அரட்டை அடிப்பதுதான். அவர்கள் கூடி பேசும் இடத்தில் ஒரு மூலையில் நின்று கேட்டுக் கேட்டுத்தான் நான் வளர்ந்தேன்.

அதனால்தான் இன்னமும் புனிதங்களின் மீதான எனது கவர்ச்சியை யதார்த்தம் பலமுறை கலைத்துப் போடுகிறபோதும் மீண்டும் மீண்டும் நான் உன்னதங்களுக்காக எழுத்தின் ஆயுதம் ஏந்தி காத்திருக்கவே செய்கிறேன்.

விகடன் தடம் - 2

பிரம்மைகளின் மாளிகை

ஒரு கலை இலக்கிய வாக்குமூலம் - 2

பெல்கோம் வீதியின் முனையில்தான் எங்கள் வீடு. அதன் எண் 12. வீட்டுக்கு மிக அருகில் கடல். கண்ணில் தென்படாது என்றாலும் கடலின் இரைச்சல் சதா காதில் விழுந்தபடி இருக்கும். இரவில் வீட்டை விட்டு வெளியே வந்து கொரட்டில் நின்றால் போதும் கடல் காற்று அள்ளிக் கொண்டு போய்விடும்..

வீட்டின் நடுவே இருந்த முற்றத்தில் ஒரு சிறு கிணறு. இரவில் அந்த முற்றத்திலிருந்து வானத்தைப் பார்த்தபடி பாயில் படுத்தால் சொர்க்கம் தெரியும். வானும், நிலவும், நட்சத்திரங்களும், கடல் காற்றும், கிணற்றில் நாங்கள் வளர்த்த தனித்த விறால் மீன் ஒன்றும் எனது ஆழ்மனதில் எப்போதும் அலையடிக்கும்.

" தமிழ் வீடு " என்று ஒரு கருத்துருவாக்கத்தை வைத்துப் பார்த்தோமானால் எங்களது பாண்டிச்சேரி வீடு அப்பட்டமான தமிழ் வீடுதான். மழை வெயிலுக்குப் பாதுகாப்பாக தளம் போட்டு கட்டப்பட்ட வீட்டின் நடுவே , ஓடு போட்டு இறக்கி , இயற்கையோடு கை கோர்க்கச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடுதான் எங்கள் முற்றம். காகம், குருவி, மைனா விளையாடும் எங்கள் முற்றத்தில் நாங்கள் வளர்க்கும் ஒன்றிரண்டு கோழிகள் கொண்டையாட்டித் திரியும். நான் வளர்ந்த பிறகு

சங்க இலக்கியத்தை புலியூர்க்கேசிகன் உரையுடன் முதல் முதல் படித்தபோது , அணிலாடு முன்றில் எங்கள் வீட்டிலும் இருந்ததே என்று ஆச்சர்யம் கொள்வேன். சூரியன், சந்திரன், நிலா என்று இயற்கை எப்போதும் எங்கள் வீட்டின் முற்றத்தின் மூலம் எங்களோடு இயைந்து வாழும். ஆனால் பருப்பு சாதத்தில் ஊற்றிய நெய் போல பிரெஞ்சுக் கலாசாரம் விநோதமான முறையில் எங்கள் தமிழ் வீட்டின் மூலை தோறும் மணக்கும். பன்முகக் கலாசாரம் பாண்டிச்சேரியின் ”வெள்ளை நகரம்” என்று அழைக்கப்பட்ட பகுதியின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு விநோத ரசவாதத்தைச் செய்திருந்தது. இதனை இன்றைய பின் காலனியப் பார்வையுடன் யோசிக்கையில் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

சில்லென்ற அதிகாலையில் கண்விழித்து விடும் ஐந்து வயது சிறுவனாகிய நான் , எல்லோரும் தூங்கும்போதே வெளி வாசற்காலில் வந்து அமர்ந்து விடுவேன். வாகனப் போக்கு வரவு இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கும் அதிகாலை வீதியில் மாடுகள் எந்த விதப் பதட்டமும் இல்லாமல் நடந்து செல்வதைப் பார்க்கையில் மனசுக்குள் மல்லிகையொன்று நிதானமாக இதழ் அவிழ்க்கும்.

அரவிந்தோ ஆசிரமத்துப் பெண்கள் அதிகாலையில் வரிசையாக யோகா பயிற்சிக்காகச் செல்வார்கள். அவர்களின் தலையில் கூந்தல் வெளியே தெரியாதது மாதிரி சீக்கியர்கள் போல பச்சை வண்ண முண்டாசு அணிந்திருப்பார்கள். உடம்பில் காலர் வைத்த வெள்ளை அரைக்கை சட்டை, இடையில் மிகக் குட்டையான பச்சை நிற அரைக்கால் சட்டை , காலில் சப்பாத்து அணிந்து அவர்கள் நடந்து போகும்போது புடவை அணிந்த என் அம்மா, மாமிகள் , அக்காக்களைப் போல அவர்கள் இல்லாதது ஆச்சர்யத்தைக் கொடுக்கும். அவர்கள் ஏதோ வேறு உலகைச் சேர்ந்தவர்கள் போலத் தெரிவார்கள்.

மூத்த ஆசிரமவாசிகள் குளித்து முடித்த ஈரம் சொட்டும் குட்டை கேசத்துடன், வெள்ளை உடையில் கையில் ஏந்திய செந்தாமரை மலர்களோடு காலை நேர தியானத்துக்காக அரவிந்தர் ஆசிரமத்து சமாதி நோக்கிச் செல்வார்கள். இந்த வடநாட்டுக்காரர்களோடு சில வீடுகள்

தள்ளியிருந்த தர்மலிங்கம் மாமாவின் வியட்நாம் மனைவி தினந்தோறும் அதிகாலையில் நடந்து செல்கையில் தனித்து தெரிவார்.

ஆண்கள் சிலர் சைக்கிளில் அரைக்கால் சட்டையோடு விளையாடப் போவார்கள். அவர்களின் விரல்களில் பிரெஞ்சு நாட்டுக் கொடியையே மோதிரமாய் அணிந்திருப்பார்கள். நீலம், வெள்ளை , ரோஜா நிறம் கொண்ட கல்மோதிரம் அணிந்த இவர்கள் "சொல்தா" என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார்கள். பிரெஞ்சு ராணுவத்தில் பணியாற்றி 35, 40 வயதுக்கெல்லாம் ஓய்வு பெற்ற பண்டிச்சேரியைச் சேர்ந்த பிரெஞ்சு சிப்பாய்களைக் குறிக்கும் பிரெஞ்சு வார்த்தைதான் "சொல்தா". செஞ்சி சாலை மைதானத்தில் " பூல் " எனப்படும் பிரெஞ்சு விளையாட்டை விளையாடுவதற்காகச் செல்லும் அவர்கள் ஆசிரமத்துக்காரர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள்.

எந்த சொல்தாவை நெருங்கி நின்று பேசினாலும் அவர்களிடமிருந்து பழவாசனை போன்ற ஒரு சாராய வாசனை வீசும். "காலையிலேயே "டக்கு" போட்டாச்சா மிஸ்ஸியே ? " என்று தங்களுக்குள் குசலம் விசாரித்துக் கொள்ளும்போது அவர்கள் சாராயம் பற்றித்தான் பேசிக் கொள்கிறார்கள் என்பது பாண்டிச்சேரியின் பச்சைப் புள்ளைக்குக்கூட தெரியும்.

எங்களது பெல்கோம் வீதி வீட்டில் திண்ணை கிடையாது. பிரெஞ்சு கலாசாரம் எங்கள் வீட்டு "திண்ணை" எனும் தமிழ் கட்டடக் கலையின் முக்கிய சமுத்திரிகா லட்சணத்தைக் காலி செய்து விட்டிருந்தது. முன்புறம் பிரெஞ்சு கட்டடக் கலையும் பின்புறம் தமிழ்க் கட்டடக் கலையும் கலந்த வீடு எங்களுடையது.. வீதியிலிருந்து வீட்டுக்குள் நுழைந்தவுடன் விசாலமான வரவேற்பு அறை. அதன் பக்கத்தில் ஒரு பெரிய அறை. இரண்டையும் கடந்து உள்ளே போனால் சாப்பாட்டு மேசை போடப்பட்ட சிறுபகுதி இருக்கும். அதைக் கடந்து போனால் இடப்பக்கத்தில் இன்னொரு படுக்கை அறை. அங்கு மிகப்பெரிய மர வேலைப்பாட்டுடன் கூடிய பெல்ஜியம் கண்ணாடி சுவரில் மாட்டப்பட்டிருக்கும். வலப்பக்கம் சென்றால் வானத்தைப் பார்த்து திறந்து கிடக்கும் பெரிய முற்றம். கிணறு. சமையலறை , குளியல் அறை, கழிவறை எல்லாம் உண்டு பின்புறம் ஒரு

சின்ன புற வாசல் கதவு உண்டு. அது அடுத்த தெருவைப் பார்த்தபடி இருந்தது.

உள் நுழைந்தவுடன் இருக்கும் வரவேற்பறையில் ஒரு மேசை , அதன் இருபுறமும் இரு நாற்காலிகள். தெருவைப் பார்த்தபடி ஒரு ஜன்னல். சுவர் முழுக்க பிரெஞ்சு ராணுவ உடையில் இருக்கும் எனது தாய் மாமன்களின் புகைப்படங்கள். இவர்கள் சைகோன், பாரீஸ், மர்சேய் ஆகிய நகரங்களில் வசிப்பவர்கள். என் அம்மாவுடன் கூடப் பிறந்த நான்கு தாய்மாமன்களில் மூன்று பேர் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றவர்கள். வீட்டுக்குள் பிரெஞ்சில் பேசிக் கொள்வதைப் பெருமையாகக் கருதினார்கள்.

வரவேற்பறையின் எதிரில் ஓர் பெரிய அறை. பாதுகாப்பு கோரும் அலமாரிகள் இங்குதான் இருக்கும். சுவரில் ஒரு பூஜை மாடம். அதற்கு ஒளி ஊடுருவக்கூடிய ஒரு திரை . அந்த மாடத்தில் வேளாங்கன்னி மாதாவின் படம். இந்த படத்தில் மாதா ஜரிகை பார்டர் , உடம்பில் ஜரிகைக் கோடு போட்ட நீல நிற புடவையைத் தலைக்குமேல் சுற்றி அணிந்தபடி கம்பீரமான இந்தியப் பெண்ணாகக் காட்சியளிப்பார். யாருக்கு உடல்நலன் கெட்டாலும் வேளாங்கன்னி ஆரோக்கியமாதாவிடம்தான் வேண்டுவார்கள்.

இத்துடன் அந்தோனியார் சிலையும் இருக்கும். அந்தோணியாரிடம் வேண்டிக் கொண்டால் காணாமல் போனவற்றையெல்லாம் கண்டு பிடித்துக் கொடுத்து விடுவார் என்று சிறுவர்களாகிய எங்களுக்கு குடும்ப நண்பரான மூலியன் தாத்தா சொல்லிக் கொடுத்திருந்தார். பிரான்சிலிருந்து வந்த லூர்து மாதாவின் பாட்டிலில் புனிதநீர் வைக்கப்பட்டிருக்கும். யாருக்காவது உடம்பு சரியில்லை என்றால் அந்த புனிதநீரை எடுத்து நெற்றியில் அணிவோம்.

அதே அறையின் பிரதான மூலையில் மற்றுமொரு பூஜை மாடம். அந்த மாடத்தில் லஷ்மி, சரஸ்வதி, விநாயகர் படங்கள் இருக்கும். மயிலம் முருகரின் பெரிய படமும் உண்டு. கற்பூர தீபாரதனைகளும் வெகு விமரிசையாக நடக்கும். எங்கள் வீட்டு ஆண்களும், பெண்களும் இரண்டு வீதி தள்ளி இருந்த மணக்குள விநாயகர் கோயிலுக்குப் போகத் தவறாதவர்கள்தான். ஆனாலும் இந்து, கிருத்துவ , இஸ்லாமிய மத

பேதங்கள் அற்ற மன சமாதானம் எங்கள் வாழ்க்கையில் இருந்தது. ஒருவர் மதத்தை இன்னொருவர் மதித்தோம்.

கிருஸ்துமஸ் விழாக்களில் எனது பாட்டி ஆதிலட்சுமி அம்மாள் பலகாரம் செய்வார்கள். “ பக்கத்து வீட்டுக்காரர்கள். பலகாரம் கொடுத்து அனுப்பும்போது நாம திருப்பிக் கொடுக்காம இருக்க முடியுமா? ” பாட்டியின் வார்த்தைகள் இன்னமும் காதில் ஒலிக்கிறது.

வீட்டில் இருந்த ஒவ்வொரு பெண்மணிக்கும் ஒரு ரிக்ஷா வண்டி சொந்தமாக இருந்தது. பெரிய கடைக்கு, சின்ன கடைக்கு போவதற்கெல்லாம் கை ரிக்ஷாவை பயன்படுத்துவார்கள். மனிதனை இன்னொரு மனிதன் இழுக்கிறானே என்ற உறுத்தல் யாருக்கும் இருந்திராத காலம். தங்களுக்குத் தேவைப்படாத நேரங்களில் அதை வாடகை சவாரிக்கு அனுப்பி விடுவார்கள். கவாப்பு, இறால் பஜ்ஜி, மீன் பஜ்ஜி, பொரிச்சுண்டை என்று என் இளமைக்கால பாண்டிச்சேரியின் உணவுப் பொருட்கள் இன்றைய பீட்சா, பர்கரிடம் ஆட்டம் இழந்து நிற்கின்றன.

விகடன் தடம் - 2

பிரம்மைகளின் மாளிகை : ஒரு கலை இலக்கிய வாக்குமூலம் - 2

பெல்கோம் வீதியின் முனையில்தான் எங்கள் வீடு. அதன் எண் 12. வீட்டுக்கு மிக அருகில் கடல். கண்ணில் தென்படாது என்றாலும் கடலின் இரைச்சல் சதா காதில் விழுந்தபடி இருக்கும். இரவில் வீட்டை விட்டு வெளியே வந்து கொரட்டில் நின்றால் போதும் கடல் காற்று அள்ளிக் கொண்டு போய்விடும்..

வீட்டின் நடுவே இருந்த முற்றத்தில் ஒரு சிறு கிணறு. இரவில் அந்த முற்றத்திலிருந்து வானத்தைப் பார்த்தபடி பாயில் படுத்தால் சொர்க்கம் தெரியும். வானும், நிலவும், நட்சத்திரங்களும், கடல் காற்றும், கிணற்றில் நாங்கள் வளர்த்த குரவை மீனும் எனது ஆழ்மனதில் எப்போதும் அலையடிக்கும்.

" தமிழ் வீடு " என்று ஒரு கருத்துருவாக்கத்தை வைத்துப் பார்த்தோமானால் எங்களது பாண்டிச்சேரி வீடு அப்பட்டமான தமிழ் வீடுதான். பனி பொழியும் மேலை நாட்டு வீடுகள் முற்றிலும் மூடப்பட்ட நிலையிலிருப்பதற்கு எதிராக ஒரு வெப்பநாடான தமிழ் மண்ணின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப காற்றும், மழையும் , வெய்யிலும் உள்ளே கலந்துறவாடுமாறு கட்டப்படுவதுதான் தமிழ் வீடு. மழை வெயிலுக்குப் பாதுகாப்பாக தளம் போட்டு கட்டப்பட்ட எங்கள் வீட்டின் நடுவே , ஓடு போட்டு இறக்கி , இயற்கையோடு கை கோர்க்கச் செய்யப்பட்ட ஒரு ஏற்பாடுதான் எங்கள் முற்றம். எங்களின் பெரும்பாலான வாழ்க்கை முற்றத்தில்தான் கழியும்.

காகம், குருவி, மைனா விளையாடும் எங்கள் முற்றத்தில் நாங்கள் வளர்க்கும் ஒன்றிரண்டு கோழிகள் கொண்டையாட்டித் திரியும். நான் வளர்ந்த பிறகு சங்க இலக்கியத்தை புலியூர்க்கேசிகன் உரையுடன் முதல் முதல் படித்தபோது , அணிலாடு முன்றில் எங்கள் வீட்டிலும் இருந்ததே என்று ஆச்சர்யம் கொள்வேன். சூரியன், சந்திரன், நிலா என்று இயற்கை எப்போதும் எங்கள் வீட்டின் முற்றத்தின் மூலம் எங்களோடு இயைந்து வாழும்.

ஆனால் பருப்பு சாதத்தில் ஊற்றிய நெய் போல பிரெஞ்சுக் கலாசாரம் விநோதமான முறையில் எங்கள் தமிழ் வீட்டின் மூலை தோறும் மணந்து கொண்டிருந்ததை மறுக்க முடியாது.

போதாக்குறைக்கு பக்கத்து அண்டை வீடுகளில் வாழ்ந்த அரவிந்தர் ஆசிரமத்துக்காரர்களும் தங்கள் பாதிப்பை எங்கள் மீது ஏற்படுத்தி இருந்தார்கள். என் தாய் சிவசங்கரி அம்மாள் அரவிந்தர் ஆசிரமத்தின் மீது உயர்ந்த அபிப்ராயம் கொண்டவராக இருந்தார். ஆசிரமத்துப் பெண்களைப் போல வெள்ளை நிறத்தில் சிறு சிறு பூப்போட்ட பருத்திப் புடவைகளை விருப்பமாய் அணிந்தார். தான் ஒரு பதின் பருவத்து சிறுமியாக பார்த்திருந்த ஆசிரமத்து அன்னையின் அழகை ஆச்சர்யத்துடன் வர்ணிப்பார். அன்னையின் இயற்பெயர் மிரா அல்பாசா என்றும் அவர் யூத இனத்தைச் சேர்ந்தவர் என்றும் எனக்குச் சொன்னவர் அவர்தான். தனது 36வது வயதில் அரவிந்தரைச் சந்திக்க புதுவை வந்த அன்னையின் தலையலங்காரத்தையும் அதில் ஒரு சிறு கிரீடம் வைத்திருப்பார் என்றும்

அவர் சொன்னபோது கிரீடம் வைத்த அன்னையின் புகைப்படம் கிடைக்குமா என்று நான் தேடியிருக்கிறேன். 1973இல் அன்னையின் மறைவுக்கு முன்னர் புதுவையின் செயின் மீன் வீதியில் தினந்தோறும் காலையில் ஆசிரமத்து கட்டடம் ஒன்றின் பால்கனியில் சக்கர நாற்காலியில் வந்து ஆசிரமத்து அன்னை தரிசனம் கொடுத்த போதெல்லாம் ஒரு இளைஞனாக வீதியில் காத்திருந்து அவரை தரிசித்திருக்கிறேன்..

1928இல் அரவிந்தர் ஆசிரமத்துக்கு வந்து 20 ஆண்டுகள் வாழ்ந்த , “பாரத சக்தி மாகாவியம்” படைத்த சுத்தானந்த பாரதியார் பற்றியெல்லாம் அறிந்தவராக இருந்தார் என் தாய்.

சுத்தானந்த பாரதி எப்படி 20 ஆண்டுகளாக மௌன விரதமும் எழுத்துமாக வாழ்ந்தார் என்றும், தன் அறையில் சதா சர்வகாலமும் அவர் எப்படி எழுதியபடியே இருந்தார் என்பது பற்றியும் என்னிடம் கதை கதையாகச் சொல்லுவார் அம்மா. அவரது அறையைச் சுத்தம் செய்து தண்ணீர் பானைக்குள் தண்ணீர் பிடித்து வைக்கும் நேரம் தவிர மற்றைப் பொழுது முழுவதும் சுத்தானந்த பாரதியார் எழுதியபடியே இருந்தார் என்று என் அம்மா சொல்லுவார்.

மௌனமும் எழுத்துமாய் வாழ்ந்த சுத்தானந்த பாரதி எத்தனை புத்தகம் எழுதியிருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? ஒரு 30, அல்லது 60 அல்லது ஒரு 100 புத்தகம் எழுதியிருப்பாரா? இல்லவே இல்லை. 1000க்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதிய அசுரன் அவர். அவருக்கு தெலுங்கு, இந்தி, பிரெஞ்சு, இலத்தீன், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகள் தெரியும். அந்த எல்லா மொழிகளிலும் அவர் புத்தகம் எழுதினார். தினம் ஒரு பிரெஞ்சுக் கவிதையை மொழிபெயர்த்து வந்து தன்னிடம் காட்ட வேண்டுமென்று அவருக்குக் கட்டளை இட்டிருந்தார் ஆசிரமத்து அன்னை.
பிரெஞ்சு எழுத்தாளர் விக்டர் ஹியூகோ எழுதிய உலகப் புகழ்பெற்ற 'லே மிசிரபிள் (Lay missirable)' என்ற நூலை பிரெஞ்சு மொழியிலிருந்து நேரிடையாக 'ஏழைபடும் பாடு' என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்த்தார் அவர்.

இப்படியாக எப்படியோ என்னைச் சுற்றிலும் எழுத்து மற்றும் இலக்கியச் செயல்பாடுகள் குறித்த செய்திகள் காதில் விழுந்தபடியே

இருந்தன. ஆனால் அப்போதுகூட நான் ஒரு எழுத்தாளனாக வேண்டுமென இளமையில் நினைத்ததில்லை. என் வீட்டுக்கு யாராவது வந்தால் என் அப்பா அவர்கள் முன்னிலையில் ”நீ வளர்ந்த பிறகு என்னவாகப் போகிறாய்? “ என்று தன் பெருமைக்காகக் கேட்பார். அப்போதெல்லாம் நானும் பெருமையாக ”ஆர்ட்டிஸ்ட்” என்றுதான் பதில் சொல்லுவேன்.

பன்முகக் கலாசாரம் பாண்டிச்சேரியின் ”வெள்ளை நகரம்” என்று அழைக்கப்பட்ட பகுதியின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு விநோத ரசவாதத்தைச் செய்திருந்தது. இதனை இன்றைய பின் காலனியப் பார்வையுடன் யோசிக்கையில் இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

சில்லென்ற அதிகாலையில் கண்விழித்து விடும் ஐந்து வயது சிறுவனாகிய நான் , எல்லோரும் தூங்கும்போதே வெளி வாசற்காலில் வந்து அமர்ந்து விடுவேன். வாகனப் போக்கு வரவு இல்லாமல் வெறிச்சோடிக் கிடக்கும் அதிகாலை வீதியில் மாடுகள் எந்த விதப் பதட்டமும் இல்லாமல் நடந்து செல்வதைப் பார்க்கையில் மனசுக்குள் மல்லிகையொன்று நிதானமாக பூக்கும்.

அரவிந்தோ ஆசிரமத்துப் பெண்கள் அதிகாலையில் வரிசையாக யோகா பயிற்சிக்காகச் செல்லும்போது அவர்களின் தலையில் கூந்தல் வெளியே தெரியாதது மாதிரி சீக்கியர்கள் போல வெள்ளை நிற முண்டாசு அணிந்திருப்பார்கள். உடம்பில் காலர் வைத்த வெள்ளை அரைக்கை சட்டை, இடையில் மிகக் குட்டையான பச்சை நிற அரைக்கால் சட்டை , காலில் சப்பாத்து அணிந்து அவர்கள் நடந்து போகும்போது புடவை அணிந்த என் பாட்டி, அம்மா, மாமிகள் , அக்காக்களைப் போல அவர்கள் இல்லாதது ஆச்சர்யத்தைக் கொடுக்கும். அவர்கள் ஏதோ வேறு உலகைச் சேர்ந்தவர்கள் போலத் தெரிவார்கள்.

மூத்த ஆசிரமவாசிகள் குளித்து முடித்த ஈரம் சொட்டும் கேசத்துடன், வெள்ளை உடையில் கையில் ஏந்திய செந்தாமரை மலர்களோடு காலை நேர தியானத்துக்காக அரவிந்தர் ஆசிரமத்து சமாதி நோக்கிச் செல்வார்கள். இந்த வடநாட்டுக்காரர்களோடு சில வீடுகள் தள்ளியிருந்த தர்மலிங்கம்

மாமாவின் வியட்நாம் துணைவியார் இன்னும் ஒரு விதத்தில் புதிய வண்ணம் ஒன்றைச் சேர்ப்பதையும் பார்த்து ஆச்சர்யம் கொள்வேன்.

ஆண்கள் சிலர் சைக்கிளில் அரைக்கால் சட்டையோடு விளையாடப் போவார்கள். அவர்களின் விரல்களில் பிரெஞ்சு நாட்டுக் கொடியையே மோதிரமாய் அணிந்திருப்பார்கள். நீலம், வெள்ளை , ரோஜா நிறம் கொண்ட கல்மோதிரம் அணிந்த இவர்கள் "சொல்தா" (soldat) என்று எல்லோராலும் அழைக்கப்பட்டார்கள். பிரெஞ்சு ராணுவத்தில் பணியாற்றி 35, 40 வயதுக்கெல்லாம் ஓய்வு பெற்ற பண்டிச்சேரியைச் சேர்ந்த பிரெஞ்சிந்தியர்களான சிப்பாய்களைக் குறிக்கும் பிரெஞ்சு வார்த்தைதான் "சொல்தா". இவர்களுக்கு என்று பாண்டிச்சேரியில் " ஃபொய்யே து சொல்தா " (**Foyer du Soldat)** எனும் தனிப்பட்ட சங்கம் இருந்தது.

செஞ்சி சாலை மைதானத்தில் " பூல் " (Boules) என்றும் " பெத்தாங்கு " என்றும் அழைக்கப்பட்ட , உலோகக் குண்டுகளை உருட்டி விளையாடும் பிரெஞ்சு விளையாட்டை விளையாடுவதற்காகச் செல்லும் அவர்கள் ஆசிரமத்துக்காரர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள். இவர்கள்தான் அன்றைய பாண்டிச்சேரியில் என் நினைவில் நிற்கும் கதாநாயகர்கள். பிரான்சில் ஆண்களும், பெண்களுமாக இருபாலரும் விளையாடிய பெத்தாங்கு விளையாட்டை புதுச்சேரியின் சொல்தாக்கள் ஆண்களுக்கு மட்டுமே உரித்தானதாக மாற்றி இருந்தார்கள். பெத்தாங்கு விளையாடுவதற்குத் தேவையான இரும்பு குண்டுகள், புஜம் என்றழைக்கப்படும் சிறிய மரக்காய்கள் ஆகியவைகூட புதுச்சேரிக்கு பிரான்சிலிருந்து தருவிக்கப்பட்டன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

எந்த சொல்தாவை நெருங்கி நின்று பேசினாலும் அவர்களிடமிருந்து பழவாசனை போன்ற ஒரு சாராய வாசனை வீசும். "காலையிலேயே "டக்கு" போட்டாச்சா மிசே ? " என்று தங்களுக்குள் குசலம் விசாரித்துக் கொள்ளும்போது அவர்கள் சாராயம் பற்றித்தான் பேசிக் கொள்கிறார்கள் என்பது பாண்டிச்சேரியின் பச்சைப் புள்ளைக்குக்கூட தெரியும். மது அருந்தினாலும் பிரெஞ்சுக்காரகள் போல் நாகரீகமாக நடந்து கொள்பவர்களாக அவர்கள் இருந்தனர். இவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வதைக் கேட்பதே படு சுவாரசியமாக இருக்கும்.

“எக்கோல் (**école --பள்ளிக்கூடம்**) போயி பையனை விட்டிட்டு வரதுக்கு கொஞ்சம் நேரமாயிடுச்சு.”

” .எனக்கும்தான் கொஞ்சம் நேரமாயிடுச்சு மிசே (**Monsieur- மிஸ்டர்)** “

”ஏன் இன்னா?”

“ஒடம்பு சரியில்ல...ஒப்பித்தாலுக்குப் (**hospital- மருத்துவமனை)** போய்ட்டு வந்தேன்.”

“ ஏதாவது பொசியம் (potion -- மருந்துக் கலவை) கொடுத்தாங்களா?

என்று பாண்டிச்சேரி தமிழ் சொல்தாக்களின் பேச்சில் பிரெஞ்சு மணக்கும்.இந்த சொல்தாக்கள் சாப்பிடும் சாப்பாடு கூட வித்தியாசமாக இருக்கும். அதற்கு தனிப்பெயர் உண்டு - ” சொல்தா சாப்பாடு ” . சொல்தாக்கள் புதுச்சேரிக்குள் ஒரு பிரெஞ்சு - தமிழ் கலவைப் பண்பாட்டை நிறுவினார்கள்.

எங்களது பெல்கோம் வீதி வீட்டில் திண்ணை கிடையாது. பிரெஞ்சு கலாசாரம் எங்கள் வீட்டு “திண்ணை” எனும் தமிழ் கட்டடக் கலையின் முக்கிய சமுத்திரிகா லட்சணத்தைக் காலி செய்து விட்டிருந்தது. முன்புறம் பிரெஞ்சு கட்டடக் கலையும் பின்புறம் தமிழ்க் கட்டடக் கலையும் கலந்த வீடு எங்களுடையது.. வீதியிலிருந்து வீட்டுக்குள் நுழைந்தவுடன் விசாலமான வரவேற்பு அறை. அதன் பக்கத்தில் ஒரு பெரிய அறை. இரண்டையும் கடந்து உள்ளே போனால் சாப்பாட்டு மேசை போடப்பட்ட சிறுபகுதி இருக்கும். அதைக் கடந்து போனால் இடப்பக்கத்தில் இன்னொரு படுக்கை அறை. அங்கு மிகப்பெரிய மர வேலைப்பாட்டுடன் கூடிய பெல்ஜியம் கண்ணாடி சுவரில் மாட்டப்பட்டிருக்கும். வலப்பக்கம் சென்றால் வானத்தைப் பார்த்து திறந்து கிடக்கும் பெரிய முற்றம். கிணறு. சமையலறை , குளியல் அறை, கழிவறை எல்லாம் உண்டு பின்புறம் ஒரு சின்ன புற வாசல் கதவு உண்டு. அது அடுத்த தெருவைப் பார்த்தபடி இருந்தது.

உள் நுழைந்தவுடன் இருக்கும் வரவேற்பறையில் ஒரு மேசை , அதன் இருபுறமும் இரு நாற்காலிகள். தெருவைப் பார்த்தபடி ஒரு ஜன்னல். சுவர் முழுக்க பிரெஞ்சு ராணுவ உடையில் இருக்கும் எனது தாய் மாமன்களின் புகைப்படங்கள். இவர்கள் வியட்நாமின் சைகோன், பிரான்சின் பாரீஸ்,

மர்சேய் ஆகிய நகரங்களில் வசிப்பவர்கள். என் அம்மாவுடன் கூடப் பிறந்த நான்கு தாய்மாமன்களில் மூன்று பேர் பிரான்சிலும், வியட்நாமிலும் இருந்தார்கள். வீட்டுப் பெண்மணிகள் கூட வீட்டுக்குள் பிரெஞ்சில் பேசிக் கொள்வதைப் பெருமையாகக் கருதினார்கள்.

வரவேற்பறையின் எதிரில் ஓர் பெரிய அறை. பாதுகாப்பு கோரும் அலமாரிகள் இங்குதான் இருக்கும். சுவரில் ஒரு பூஜை மாடம். அதற்கு ஒளி ஊடுருவக்கூடிய ஒரு திரை . அந்த மாடத்தில் வேளாங்கன்னி மாதாவின் படம். இந்த படத்தில் மாதா ஜரிகை பார்டர் , உடம்பில் ஜரிகைக் கோடு போட்ட நீல நிற புடவையைத் தலைக்குமேல் சுற்றி அணிந்தபடி கம்பீரமான இந்தியப் பெண்ணாகக் காட்சியளிப்பார். யாருக்கு உடல்நலன் கெட்டாலும் வேளாங்கன்னி ஆரோக்கியமாதாவிடம்தான் வேண்டுவார்கள்.

இத்துடன் அந்தோனியார் சிலையும் இருக்கும். அந்தோணியாரிடம் வேண்டிக் கொண்டால் காணாமல் போனவற்றையெல்லாம் கண்டு பிடித்துக் கொடுத்து விடுவார் என்று சிறுவர்களாகிய எங்களுக்கு குடும்ப நண்பரான ழூலியன் தாத்தா சொல்லிக் கொடுத்திருந்தார். பிரான்சிலிருந்து வந்த லூர்து மாதாவின் பாட்டிலில் புனிதநீர் வைக்கப்படிருக்கும். யாருக்காவது உடம்பு சரியில்லை என்றால் அந்த புனிதநீரை எடுத்து நெற்றியில் அணிவோம்.

அதே அறையின் பிரதான மூலையில் மற்றுமொரு பூஜை மாடம். அந்த மாடத்தில் லஷ்மி, சரஸ்வதி, விநாயகர் படங்கள் இருக்கும். மயிலம் முருகரின் பெரிய படமும் உண்டு. கற்பூர தீபாரதனைகளும் வெகு விமரிசையாக நடக்கும். எங்கள் வீட்டு ஆண்களும், பெண்களும் இரண்டு வீதி தள்ளி இருந்த மணக்குள விநாயகர் கோயிலுக்குப் போகத் தவறாதவர்கள்தான். ஆனாலும் இந்து, கிருத்துவ , இஸ்லாமிய மத பேதங்கள் அற்ற மன சமாதானம் எங்கள் வாழ்க்கையில் இருந்தது. ஒருவர் மதத்தை இன்னொருவர் மதித்தார்கள்.

கிருஸ்துமஸ் விழாக்களில் எனது பாட்டி ஆதிலட்சுமி அம்மாள் பலகாரம் செய்வார்கள். “ பக்கத்து வீட்டுக்காரர்கள். பலகாரம் கொடுத்து அனுப்பும்போது நாம திருப்பிக் கொடுக்காம இருக்க முடியுமா? ” பாட்டியின் வார்த்தைகள் இன்னமும் காதில் ஒலிக்கிறது.

இதேபோல்தான் " மஸ்கராது "(Mascarade) எனும் பேய், பிசாசு, புலி, சிங்கம், கரடி என்று வித விதமான முகமூடி அணிந்த இளைஞர்களின் பவனி நெஞ்சைக் குதூகலிக்க வைக்கும். இது கிருத்துவ மதத்தோடு சம்பந்தமுடையது என்றாலும் மஸ்கராது ஒரு மத நிகழ்ச்சியாக அல்லாமல் ஒரு சமூகத் திருவிழாவாகவே கொண்டாடப்படும். என் வீட்டிலேயே புதுச்சேரியில் இருந்த தாய்மாமன் ஒருவர் காகிதங்களை ஒன்றன் மேலொன்று ஒட்டி முகமூடிகளைச் செய்து வண்ணம் பூசும் முகமூடிக் கலையை நான் வேடிக்கப் பார்த்திருக்கிறேன்.. அதே நேரத்தில் சிறுவனாகிய என்னை மஸ்கராது பயமுறுத்தவும் செய்யும். இரவில் வெளிச்சத்தோடும், பாண்டு வாத்தியத்தோடும் "மஸ்கராது" வரும் என்று எதிர்பார்த்து கண்விழித்து காத்திருப்பேன்.

எங்கள் வீட்டில் இருந்த ஒவ்வொரு பெண்மணிக்கும் ஒரு ரிக்ஷா வண்டி சொந்தமாக இருந்தது. பெரிய கடைக்கு, சின்ன கடைக்கு போவதற்கெல்லாம் கை ரிக்ஷாவை பயன்படுத்துவார்கள். மனிதனை இன்னொரு மனிதன் இழுக்கிறானே என்ற உறுத்தல் யாருக்கும் இருந்திராத காலம் அது. தங்களுக்குத் தேவைப்படாத நேரங்களில் அதை வாடகை சவாரிக்கு அனுப்பி விடுவார்கள்.

கவாப்பு, இறால் பஜ்ஜி, மீன் பஜ்ஜி, பொரிச்சுண்டை என்று என் இளமைக்கால பாண்டிச்சேரியின் உணவுப் பொருட்கள் இன்றைய பீட்சா, பர்கரிடம் ஆட்டம் இழந்து நிற்கின்றன. இத்தகைய உணவுப் பொருட்களின் மீது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் எப்படி ஆர்வம் கொண்டவராக இருந்தார் என்பதையெல்லம் சொல்லும் மூத்தவர்கள் என்னைச் சுற்றி இருந்தார்கள். பாரதிதாசனாரை "ஆலங்குப்பத்து வாத்தியார்" என்று குறிப்பிடும் அவர் வகுப்பு மாணவர்கள் எண்ணையிட்டு தலையைப் படியப் படிய வாரிக் கொண்டு சென்றால், தலையை வாருவதில் கவனம் சென்றால் உனக்கு எப்படி படிப்பு வரும் என்று சொல்லி அடிப்பார் என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

பாரதிதாசனார் பற்றி பாண்டிச்சேரியில் என்னைச் சுற்றி சொல்லப்பட்ட கதைகள் எனக்கு சுவாரசியம் கூட்டியவை. சுப்புரத்தின வாத்தியார் என்று அழைக்கப்பட்ட பாரதிதாசனார் விடிவதற்கு முன்னரே கையில் ஒரு கள் மொந்தையுடன் கடலுக்குச் சென்று விடுவாராம். புதுச்சேரி கடற்கரையில்

அமர்ந்தபடி கள்ளைக் கொஞ்சம் கொஞ்சமாக அருந்தியபடியே கடலின் அடிவானத்து விடியலை ரசித்தபடி இருப்பாராம். முழுதாக விடிந்த பிறகுதான் அவர் கடலை விட்டு அகலுவாராம். இதனால்தான் பாரதிதாசனார் கவிதைகளில் எப்போதெல்லாம் விடியலைப் பாடுகிறாரோ அப்போதெல்லாம் அவரது சொற்கள் புது வெளிச்சம் கொண்ட பரவச நிலையை அடைந்து விடும். “வியற்காலை வேளை - விரிந்த தென்னம்பாளை , கடலிலெல்லாம் காற்றிலெல்லாம் தூவிற்றுப் பொன் தூளை “ என்று எழுதுகிறபோதும் சரி, அழகின் சிரிப்பு நூலில் ”அருவிகள் வைரத் தொங்கல். அடர் கொடி பச்சைப் பட்டு. குருவிகள் தங்கக் கட்டி. குளிர்மலர் மணியின் குப்பை.” என்று பாடுகிறபோதும் சரி பாரதிதாசனார் கள்ளோடு மாந்திய அதிகாலைக் கடலின் சூரியன் காகிதத்தில் வந்து பிரகாசிக்கத் தொடங்கி விடும்.

பிற்காலத்தில் நான் மும்பையிலிருந்து புதுவை வந்திருக்கும்போதெல்லாம் பாரதிதாசனாரைப் பின் பற்றி நானும் மூன்று மணி இருட்டிலேயே பாண்டிச்சேரி கடலுக்கு ஒரு நோட்டு புத்தகம் பேணாவுடன் சென்று விடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். (” இவன் பர்சை என்றைக்கு அடித்துப் பிடுக்குகிறார்களோ அன்றைக்குத்தான் இவன் திருந்துவான் “ என்று என் தாய்மாமன் முணுமுணுப்பது காதில் விழத்தான் செய்யும்.) இருள் இன்னமும் விலகாத , ஆள் நடமாட்டம் இல்லாத தெருக்களில் ஒரு திருடனைப் போல கடலை நோக்கி நடந்து செல்வேன். என் செருப்பு சத்தம் கேட்டு வீட்டுத் திண்ணைகளில் தூங்கும் சிலரின் போர்வைக்குள்ளிருந்து “ மணி என்ன மிசே ஆச்சு?” என்று குரல் மட்டும் கேட்கும். அதிகாலைக் கோலம் போடுபவர்கள்கூட இன்னமும் போர்வைக்குள்ளேதான். அடை அடையாய் இருள் மண்டிய மரங்களில் சிலசமயங்களில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பறவைகளின் கீச்சொலி மட்டும் கேட்கும். மற்றபடி மரங்கள் மௌனித்தே இருக்கும்.

புதுச்சேரியின் எல்லா தெருக்களும் கடலில்தான் போய் முடியும் என்பதால் மனம் போனபடி எந்தத் தெருவில் வேண்டுமானாலும் நடக்கலாம். இருட்டில் கடலை அடைந்தால் கடல் பெரிதாக ஆர்ப்பரிக்காமல் , புறாக்கள் தொண்டைக்குள்ளேயே குமுறுவது போல குமுறிக் கொண்டிருக்கும். கட்டுமரங்கள் மட்டும் அலைகளின் மேல். காந்தி சிலைக்குப் பக்கத்தில் கம்பீரமாக வானை நோக்கி எழுந்து நிற்கும் கல்

தூண்களில் அந்தக் காலத்து அரசியல்வாதிகள் முறுக்கி விட்ட மீசையும், வெற்றுடம்புத் தொப்பைக்குக் கிழே குறுவாள் செருகிய நிலையில் கூப்பிய கையோடு செதுக்கப்படிருப்பார்கள். அவர்களுக்கு இணையாக இரட்டை நாடி சரீரத்துடன் கூர் மூக்கும், முகத்துக்குப் பக்கத்தே சரியும் கொண்டையுமாக நாயக்கர் காலப் பெண்களின் சமுத்திரிகா லட்சணத்துடன் அரசியரும் கைகூப்பி நிற்பார்கள்.

கையில் பாரதிதாசனாரைப் போல் கள் மொந்தை இல்லையென்றாலும், விடிய விடிய மாறும் வெளிச்ச நியாயங்களுக்கு ஏற்ப கடலை ரசித்தபடி மனதில் தோன்றும் வார்த்தைகளையெல்லாம் நோட்டில் குறித்துக் கொண்டிருப்பேன் நான் . அதிகாலை 3 மணி, 5 மணி, 6 மணி, பகல் 11 மணி , இரவு 10 மணி என்று நேரத்தைக் குறித்து குறித்து அந்த நேரத்துப் பாண்டிச்சேரி கடல் எப்படி இருந்தது என்று நிறைய கவிதைகள் எழுதினேன்.

பிரெஞ்சு இம்ப்ரஷனிச ஓவியரான கிளாட் மோனே (Claud Monet) ஒரே இடத்தில் அமர்ந்தபடி தன் எதிரே இருக்கும் இயற்கைக் காட்சியின் மீது வெளிச்சம் மாற மாற அதே காட்சியை வெவ்வேறு ஓவியங்களாகத் தீட்டிப் பார்த்தது போல் நான் புதுச்சேரி கடல் மீது வெளிச்சம் மாற மாற அது எப்படி வித விதமாகக் காட்சி அளிக்கிறது என்பதைக் கவிதைகளாக எழுதிப் பார்த்தேன். இக்கவிதைகளில் சிலவற்றை 1982 இல் கல்யாண்ஜி, விக்கிரமாதியன், வண்ணநிலவன் ஆகிய பலரது முதல் கவிதைத் தொகுப்பாக வெளிவந்த, அன்னம் நவகவிதை வரிசையில் கவிஞர் மீரா வெளியிட்ட எனது “அந்நியன்” தொகுதியிலும், 1991இல் வெளிவந்த எனது “முப்பட்டை நகரம்” கவிதைத் தொகுதியிலும் சேர்த்திருக்கிறேன்.

கடலுக்கு அருகாமையில் இருக்கும் அரசு மருத்துவ மனையில், என் தாயின் கருப்பை விட்டு வெளியே வந்தபோது முதன் முதாலாக நான் கேட்கத் தொடங்கிய ஓசையே கடலோசைதான்.

கடல் எனக்கு ஞானாசிரியன். வாழ்க்கை பற்றிய தத்துவ விசாரணைகளை நான் கடலோடுதான் மேற்கொண்டிருக்கிறேன். நம்மைச் சுற்றி இருக்கும் உலகத்தின் வெளிச்சம் கணம் தோறும் மாறிக் கொண்டிருக்கிறது. அதன் மீது நமக்கு எந்த அதிகாரமும் இருப்பதில்லை என்பதைக் கடல்தான் எனக்குக் கற்றுக் கொடுத்தது.

நமது எழுத்துக்களின்மீது மட்டும் நமக்கு அதிகாரம் இருக்கிறதா என்ன? நான் ஒன்று எழுத வாசகன் அதை வேறொன்றாகப் புரிந்து கொள்ள இடம் கொடுக்கிறது எழுத்து. அலைகள் வருகின்றன. அலைகள் போகின்றன. எங்கிருந்து வருகின்றன, எங்கே போகின்றன என்று தெரியாது. ஆனால் கடலின் ஈரமணலில் நான் எழுதும் என் பெயரை அழிக்க மட்டும் அவை மறப்பதேயில்லை.